**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>**

அ.வ.எண். 69/2022

பெயர் – முத்துச்சாமி(பி.வா.சா.1)

நாள் – 05.11.2025

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1) வாதி எனக்கு தாய்மாமா மகள் என்றால் சரிதான். வாதிக்கு கந்தசாமி என்பவரை திருமணம் செய்து அவருக்கு துளசிராஜா என்ற மகன் உண்டு என்றால் சரிதான். நான் அமுதா என்பவரை திருமணம் செய்து விவாகரத்து பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதற்குரிய ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிராமத்தில் வைத்து நடைபெற்ற விவாகரத்து ஏற்பாடு ஆகும், நீதிமன்றம் மூலம் விவாகரத்து பெறவில்லை. விவாகரத்து குறித்து கிராமத்தில் எதுவும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை.

2) எனக்கு அமுதாவுக்கும் நடைபெற்ற திருமணத்தில் பயனாக பிரகாஷ் என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். பிரகாஷ் என்பவரை நான் வளர்த்து திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். எனது மகனின் வயது என்ன என்றால் 39 ஆகும். வாதி எனது தாய்மாமா மகள் என்பதால் அந்த முறையில் அவரது வீட்டிற்கு அடிக்கடி சென்று வருவேன் என்றால் சரிதான். நான் எனது தாய்மாமா வீட்டில் வளர்ந்தேன் என்றால் சரிதான்.

3) எனக்கு திருமணம் ஆகியவை எனது தாய்மாமா தான் செய்து வைத்தார் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது தாய்மாமாவின் மகளான வாதியை திருமணம் செய்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதுகுறித்து ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கல்யாண பத்திரிக்கை அதற்குரிய புகைப்படம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. திருமணத்தை பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) நானும், வாதியும் ஒன்றாக ஆர்.ஆர் நகரில் வீடு எடுத்து குடியிருந்து வந்தோம் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளநிலையில் அதுகுறித்து வாடகை ஒப்பந்தம் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உண்மையில் நான் வீடு எடுத்து வாழ்ந்து வந்திருந்தால் வாடகை ஒப்பந்தத்தை தாக்கல் செய்திருப்பேன், அவ்வாறு இல்லை என்பதால் தான் பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் மகன் துளசிராஜாவை ராம்கோ பள்ளியில் நான் சேர்த்துள்ளேனா என்றால் அவரது அம்மா தான் சேர்த்தார். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி தான் எனது வழக்கறிஞருக்கு தெரியும் என்றால் சரிதான்.

5) எனது நிரூபண வாக்குமூலத்தில் நானும், வாதியும் காமராஜபுரம் தெருவில் சுமார் ஒரு வருடம் வாழ்ந்து வந்தோம் என்று குறிப்பிடுகையில் அதுகுறித்து வாடகை ஒப்பந்தம் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. னது நிரூபண வாக்குமூலத்தில் நானும், வாதியும் படந்தால், வசந்த நகரில் வாழ்ந்து வந்தோம் என்று குறிப்பிடுகையில் அதுகுறித்து வாடகை ஒப்பந்தம் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6) நான் தற்போது என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோவிலில் பக்தர்கள் தங்குவதற்கும், குளிப்பதற்கும், சமையல் செய்வதற்கும் அனைத்து வசதிகளும் செய்து கொடுப்பதற்கான கடையை நடத்தி வருகிறேன். எனது மாத வருமானம் எவ்வளவு என்றால் ரூ.10,000/— வரும்.

7) வாதியின் கணவர் கந்தசாமி 2002 ம் ஆண்டு விபத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதனால் இழப்பீடாக ரூ.5 லட்சம் கிடைக்க பெற்றது என்றால் சரிதான். அதில் துளசிராஜாவிற்கு ரூ.2 லட்சமும், வாதியின் கணவருடைய பெற்றோருக்கு ரூ.1 லட்சமும் கிடைக்க பெற்றது என்றால் சரிதான். அந்த பணத்தை வைத்து சாத்தூர் போக்குவரத்து நகரில் 5 சென்ட் அளவுள்ள வீட்டு மனையை நான் வாதி பெயருக்கு கிரையம் முடித்து கொடுத்தேன் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது சரியல்ல, எனது சம்பாத்தியத்தில் அந்த வீட்டு மனையானது வாங்கப்பட்டது. வீட்டு மனையை எவ்வாறு வாங்கினேன் என்றால் ரூ.5 லட்சம் ரொக்கமாக கொடுத்து வாங்கினேன்.

8) வீட்டு பத்திரமானது யாரிடம் உள்ளது என்றால் வாதியிடம் உள்ளது. வீட்டு மனையை நான் எந்த வருடம் வாங்கினேன் என்றால் 11.12.2009 ம் ஆண்டு வாங்கினேன். அந்த வீட்டில் தற்போது யார் இருந்து வருகிறார் என்றால் எனது மனைவி இருந்து வருகிறார். வீட்டிற்குரிய மின்சார கட்டண ரசீது, வீட்டு வரி ரசீது ஆகியவற்றை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதியின் பெயரில் தான் மின்சார கட்டண ரசீது, வீட்டு வரி ரசீது ஆகியவை உள்ளது

என்றால் சரிதான், ஆரம்பத்தில் என் பெயரில் தான் இருந்தது, பின்பு எனது மனைவி என்னுடன் சண்டையிட்டு அவர் பெயருக்கு மாற்றிவிட்டார்.

9) வீட்டு பத்திரமானது யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் என் பெயரில் தான் வாங்கப்பட்டது. மேற்படி வீட்டை மாற்றம் செய்தததில் ரூ.2 லட்சம் செலவு ஏற்பட்டது என்று குறிப்பிடுகையில் அதற்குரிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதியானவர் மின்சார வாரியத்தில் Accessor ஆக வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான்.

10) எனக்கு தற்போது வயது என்ன என்றால் 65 ஆகும். வாதிக்கு தற்போது எவ்வளவு வயது இருக்கும் என்றால் தோராயமாக என்னை விட 10 வயது குறைவாக இருக்கும். வாதிக்கு 5 பவுன் மதிப்பில் தாலிக்கொடி போட்டு, வருடம் வருடம் ரூ.1 லட்சம் சீட்டு கட்ட உதவியாக இருந்துள்ளேன். தாலிக்கொடி எப்போது வாங்கி தந்தேன் என்றால் சுமார் 10 வருடத்திற்கு முன்பாக வாங்கி தந்தேன். மேற்படி சொன்னதை தவிர வேறு சொத்து எதுவும் எனது மனைவிக்கு வாங்கி தந்துள்ளேனா என்றால் இல்லை.

11) எனது மகன் பிரகாஷ் 9 ம் வகுப்பிற்கு மேலாக படிக்கவில்லை என்றால் சரிதான். பொருளாதர ரீதியில் நான் செழிப்பாக இருந்திருந்தால் பிரகாஷை நன்கு படிக்க வைத்திருந்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது மகன் படிப்பு வரவில்லை என்று கூறியதால் தான் அவனது படிப்பு நிறுத்தப்பட்டது. ஏற்கனவே எனக்கும் வாதிக்கும் ஏற்பட்ட பிரச்சனையில் இருக்கன்குடி காவல் நிலையத்தில் எனது கடையின் பாதி மதிப்பு வாதி பெயரில் கொடுக்க வேண்டுமென்று எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

12) வாதியிடம் பணத்தை பெற்றுக் கொண்டு அதை திருப்பி செலுத்தாததால் எனது கடையின் பாதி மதிப்பு அவரது பெயருக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரகாஷ் தனியாக ஒரு கடை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். ஏற்கனவே வாதியுடன் சேர்த்து வைக்க கோரி சாத்தூர் சார்பு நீதிமன்றத்தில் HMOP.No.08/2020 (வா.சா.ஆ.4) தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். HMOP.No.08/2020 வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே எனது முதல் மனைவியுடன் ஏற்பட்ட திருமணத்தை

ரத்து செய்யாத காரணத்தினால் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது, எனவே வாதி எனது மனைவி என்று உரிமைகோர இயலாது என்றால் சரியல்ல.

13) வாதி ஏற்கனவே மின்சார வாரியத்தில் வேலை செய்து வருவதால் அவர் கொடுத்த பணத்தையும், இழப்பீடாக கிடைத்த பணத்தையும் வைத்து கிரையம் வாங்க சென்ற போது வேண்டுமென்றே என் பெயரை பத்திரத்தில் இணைத்துள்ளேன் என்றால் சரியல்ல, வா.சா.ஆ.1 பத்திரத்தில் வாதி தான் எனது மனைவி என்று குறிப்பிட சொன்னார். வாதி தான் எனது மனைவி என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்றால் சரிதான்.

14) 2009 ம் ஆண்டிலிருந்து இன்றைய தேதி வரை வாதி தான் அந்த வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றால் 2009 ஆண்டிலிருந்து ஐந்து ஆறு ஆண்டுகள் வரை நாங்கள் ஒன்றாக தான் குடியிருந்தோம், அதற்கு பின்பு நானே வெளியே வந்துவிட்டேன். வீடு சம்மந்தமாக வேறு எதுவும் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. வாதி மின்சார வாரியத்தில் வேலை செய்து வருவதாலும், அவரது சம்பளத்தை பறிக்கும் பொருட்டும், அவரது சொத்தை அபகரிக்கும் பொருட்டு மோசடியாக இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

15) அவர் பெண் என்பதாலும், ஆதரவுக்கு யாருமில்லை என்பதாலும், எனக்கு பணம் கிடைக்கும் என்பதற்காக இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.